



நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பாளை வடக்கு ஒன்றியச் செயலாளர் வேளங்குளம் கண்ணன் ஏற்பாட்டில் பாளையஞ்செட்டி குளத்தில் வீடு,வீடாகச் சென்று "ஓரணியில் தமிழ்நாடு" புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்றக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று வீடு, வீடாகச் சென்று புதிய உறுப்பினர் சேர்க்கை முகாமை துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், ஞான திரவியம், தொகுதி பார்வை யாளர் சுரேஷ் ராஜன், மாநில விவசாயத் தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார், ஆதித்தன், அணி அமைப்பாளர்கள் செல்வ சூடாமணி, ஜான் ரபீந்தர், பிரேம் ஆனந்த் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டைமாவட்டம் வாலாஜா ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வருவாய்த் துறையின் சார்பில் 82 திருநங்கைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு.சந்திரகலா ஒன்றியக் குழு தலைவர் வெங்கட்ரமணன். துணைத் தலைவர் ராதாகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் செல்வம். ஒன்றிய செயலாளர்கள் எம்.சண்முகம், பத்மநாபன், நகரச் செயலாளர் து.தில்லை, பொதுக்குழு உறுப்பினர் பொன்னன், அவைத்தலைவர் ராதாகிருஷ்ணன், ரங்கசாமி, ஜான்ஜெயபால், செங்காடுசாரதி, விமல், மனோகரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் விஜியகுமார், மாவட்ட பிரதிநிதி கணேசன் , ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜெய், சுரேஷ், முஸ்தபா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சமத்துவம் கூட்டுறவின் மகத்துவம் - மினி மாரத்தான் துவக்க விழா !

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, ஜூலை 6-

சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 மற்றும் சர்வ தேச கூட்டுறவு நாள் கொண்டாட்டத்தை முன் னிட்டு, தமிழக கூட்டுற வுத் துறை சார்பில் COOPATHON மினி மாரத்தான் போட்டி நடைபெறவுள்ளது 'சமத்து வம் கூட்டுற வின் மகத்து வம்' "கூடுவோம், ஒடு வோம் கூட்டுறவால் உலகை வெல்வோம்" என்ற கருப் பொருளை கொண்டு மினி மாரத்தான் சென்னை தீவுத்திடலில் இன்று (06.07.2025 - ஞாயிற்றுக் கிழமை) காலை 05.30 மணி யளவில் நடைபெறவுள் ளது.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் மினி மராத்தான் போட்டியை கொடிய சைத்து துவக்கி வைக்க உள் ளார். மினி மாரத்தான் தீவுத்திடலில் தொடங்கி வெற்றி போர் நினைவுச் சின்னம், அண்ணா சதுக் கம், விவேகானந்தர் இல்லம் வரை சென்று மீண்டும் அதே பாதையில் தீவுத்திடல் வந்தடையும் மொத்த தொலைவு 5 கி.மீ ஆகும். இப்போட்டியில் 18 வயது தொடங்கி 40 வயது உடை யவர்கள், மேலும் 40 வயது முதல் அதற்கு மேல் 2000 க்கும் மேற்பட்ட முன்பதிவு செய்துகொண்ட நபர்கள் ஆண், பெண் என கலந்து கொள்ள உள்ளார்கள்.

ஆண்கள் பிரிவுக்கு முதல் பரிசாக ரூ.30,000, இரண் டாம் பரிசாக ரூ.20,000 மூன்றாம் பரிசாக ரூ,10,000 வழங்கப்பட உள்ளது. பெண்கள் பிரிவுக்கு முதல் பரிசாக ரூ.30,000, இரண் டாம் பரிசாக ரூ,20,000 மூன்றாம் பரிசாக ரூ,10,000 என வழங்கப்பட உள்ளது. பங்குபெற்ற அனைவருக் கும் பதக்கம் மற்றும் சான்றி தழ்களை பதிவிறக்கம் (ONLINE DOWNLOAD) செய்யும் வகையிலும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதற்கான தனி ஏற்பாடுகள் தீவுதிட லில் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், மருத் துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலைத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி முன் னிலை வகிக்க உள்ளார்கள். அரசு முதன்மை செயலா ளர், கூட்டுறவு உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை சத்யபிரதசாகு கூட் டுறவுச் சங்கங்களின் பதிவா ளர் க.நந்தக்குமார் கூடுதல் பதி வாளர் (நுகர்பு பணி கள்) ச.பா.அம்ரித் மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப் புகளின் பிரதிநிதிகள், கூட் டுறவா ளர்கள், சீர்மிகு பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள் ளார்கள்.

# அருந்தமிழ்ப் பெருங்கவிக்கோ ஆலமரம் சாய்ந்ததே...!



**அருங்கவிக்கோ என்றே அனைவரும் போற்றிய**
**ஆலமரம் "பெருங்கவிக்கோ" வாமுசே**
**தமிழறிஞர்**
**விரைந்து மறைந்தாரே விண்ணுலகம்**
**சென்றாரே...!**
**வேதனையில் துடித்து விம்முகிறேன் துக்கத்தில்...**

**தொண்ணூறு அகவையிலும் தொய்வின்றித் தமிழ்ப்பணி**
**தொடர்ந்து பணியாற்றி நிமிர்ந்து நின்றாரே...**
**அன்னையாம் தமிழன்னைக்கு அணிமகுடம் சூட்டி அழகுபார்த்து**
**மகிழ்ந்திட்ட ஆலமரம் சாய்ந்ததே...!**

**இறுதிமூச்சு வரைக்கும் தமிழுக்கே என்று**
**இறுமாப்போடு முழக்கமிட்ட செந்தமிழ்ச் சிங்கம்!**
**உறுதியோடு கலைஞரின் கரங்கள் பற்றி**
**உற்சாகமாய் உலாவந்த கொள்கைத் தங்கம்!**

**உலகத்தின் கவிஞர்கள் அனைவரோடும் உறவுகொண்டு**
**உலாவந்த பெருங்கவிஞர் நம்மைவிட்டுப் பிரிந்தாரே - இவர்வ**
**லம்வந்து தமிழ்ப்பணிக்கு செல்லாத நாடில்லை**
**வாமுசேயின் கவிஆற்றலுக்கு எதுவுமே ஈடில்லை**

**மாண்புமிகு தளபதியிடம் மாசற்ற அன்புகொண்டு**
**மனமுவந்து சாதனைகளை எழுதியே குவித்தாரே...**
**"மண்மொழி மானம்காக்கும் மாமுதல்வர்" என்று**
**மாகவிதையை நேற்றைய முரசொலியில் எழுதினாரே...**

**இரண்டுநாள் முன்புதான் கி.வீரமணி அய்யாவை**
**இருவருமே இணைந்துசென்று சந்தித்து வந்தோம்...**
**திரண்டு வந்து அந்நினைவு தேம்பவைத்துவிட்டதே...**
**தேறுதலுக்கு இடமின்றி புலம்பவைத்து விட்டதே...!**

**இப்படியொரு தமிழறிஞரை இப்புவியில் இனிமேல்**
**எப்போது காண்போம்! எங்குஇனி தேடுவோம்**
**முப்போதும் தமிழ்தமிழ்என மூச்சுவிட்ட பெருங்கவிக்கோ**
**முத்தமிழாய் நம்மிடையே வாழ்ந்துகொண்டே இருப்பார்!**

**-கவிஞர்**
**இரவிபாரதி**





தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி பேரூர் பகுதியில் வீடுகளுக்குச் சென்று 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது. இதில் இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜி.பி ராஜா, இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் செஞ்சுரி செல்வம், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர் சேதுராஜா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் எஸ்.டி.எஸ்.சிவா, அர்ஜுன் பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை மாவட்டத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" கழக உறுப்பினர் சேர்க்கை!

## அமைச்சர்கள் கே ஆர் . பெரிய கருப்பன் - தங்கம் தென்னரசு, தமிழரசி எம்.எல்.ஏ. - மு.தென்னவன் வீடுவீடாகச் சென்றனர்!

சிவகங்கை, ஜூலை 6 .

கழகத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் ஓரணி யில் தமிழ்நாடு பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் கடந்த மூன்றாம் தேதி முதல் மாவட்டங்கள் தோறும் நடைபெற்று வரு கிறது. இதில் சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 3ம் தேதி திருப்பத்தூர் சட்ட மன்ற தொகுதிக்கு உட் பட்ட சிங்கம்புணரி தாலுகா அரளிக்கோட்டை யில் மாவட்ட கழக செய லாளர்அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் தலைமை யில் ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி வீடு வீடாகச் சென்று துவக்கி வைத்தார். கழக அரசின் நான்கரை ஆண்டு சாதனைகள் ஒன் றிய அரசினால் தமிழகத் திற்கு ஏற்பட்டுள்ள இடை யூறுகள் பாரபட்சம் போன்றவற்றை எடுத்துக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் டாக் டர் எஸ்.சுந்தர்ராஜ், சிங்கம் புனரி தெற்கு ஒன்றிய செய லாளர் கே . பாலசுப்பிரமணியன் ஒன் றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துக்குமார் தகவல் தொழில்நுட்ப அணி பணி அமைப்பாளர் காளிமுத்து ஊராட்சி செயலாளர் பில் லப்பன் நிர்வாகிகள் மதிய ழகன், சதீஷ் ,பாலா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்கு மார் ஊராட்சி கழக நிர்வா கிகள் சென்றிருந்தார்கள்.

மானாமதுரை நகர் கழ கத்தின் சார்பில் 17 வது வட் டத்தில் மாவட்ட கழக செயலாளரும் அமைச்சரு மான கேஆர்.பெரியகருப் பன் தலைமையில் நகர் கழக செயலாளருமான க.பொன் னுச்சாமி முன்னிலையில் மண்டல பொறுப்பாளரும் நிதியமைச்சருமான தங்கம் தென்னரசு வீடுவீடாகச் சென்று ஓரணியில் ,தமிழ் நாடு கழக உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சியை மக்க ளிடம் எடுத்துச் கூறி துவக்கி வைத்தார். பொது மக்களிடம் கழக அரசின் நான்கரை ஆண்டு சாதனை களை எடுத்துக் கூறி ஒன்றிய அரசின் மாநில மக்கள் விரோத போக்கினை எடுத் துக் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் திரு மதி தமிழரசி ரவிக்குமார் எம். எல். ஏ மாவட்ட கழ கத் துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், முன் னாள் எம்.எல்.ஏ நகர் மன்ற தலைவர் எஸ் .மாரியப்பன் கென்னடி, ஒன்றிய செயலா ளர்கள் துரை.ராஜா மணி, அ.முத்துச்சாமி, மா .அண் ணாதுரை,நகர்கழக நிர்வா கிகள் சுரேந்திரன்,கார்த்தி, பாஸ்கர் ,அதியமான், 17வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் சக்தி ஸ்வரன் மற்றும் நகர்கழக நிர்வாகிகள் சென்றிருந் தார்கள்.

சிவகங்கை நகரில் 27வது வார்டில் நகர்கழகச் செய லாளர் நகர்மன்ற தலைவரு மான சி.எம். துரை .ஆனந்த் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் நகர் கழக நிர்வாகிகள் ஜெய காந்தன், ராமதாஸ் ராஜா சர்புதீன் உட்பட நகர் கழக நிர்வா கிகள் கலந்து கொண்டார் கள்.

காரைக்குடி மாநகரில் மாநகர செயலாளர் துணை மேருமான நா.குணசேகரன் தலைமையில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் வீடு வீடாகச் சென்று நடைபெற் றது. இதில் நகர் கழக நிர்வா கிகள் சன் சுப்பையா, சொ.கண்ணன் வட்ட பிரதி நிதி ரமேஷ் மற்றும் நிர்வா கிகள் மாநகராட்சி உறுப்பி னர்கள் சென்றிருந்தார்கள் . தேவகோட்டை நகர்கழகத் தின் சார்பில் நகர்கழக செய லாளர் பெரி.பாலா தலை மையில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை கழக உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நகர் கழக நிர்வாகிகள் அன்புச் செல்வன், இளங்கோ, கருணாநிதி, மற் றும் நகர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

திருப்புவனத்தில் ஒன்றி யபேரூர் கழகத் தின் சார் பில் மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் தலைமையில் ஒன் றிய கழகச் செயலாளர்கள் திருமதி வசந்திசேங்கைமா றன், சுப்பிரமணியன்,பேரூர் கழக செயலாளர் நாகூர் கனி ஆகியோர் முன்னிலை யில் நடைபெற்றது.

இதில் தமிழரசி ரவிக்கு மார் எம்.எல்.ஏ. ஓரணியில். தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி யினை துவக்கி வைத்தார். பேரூர் ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்துகொண்டார்கள் . மானாமதுரை கிழக்கு ஒன் றியத்தில் ஒன்றிய செயலா ளர் துரை.ராஜா பணி தலை மையிலும் மானாமதுரை மேற்கு ஒன்றியத்தில் ஒன் றிய செயலாளர் மா. அண் ணாதுரை தலைமையில் தெற்கு ஒன்றியத்தில் அ. முத்துச்சாமி தலைமையி லும், இளையான்குடி வடக்கு ஒன்றியத்தில் முன் னாள் எம்.எல்.ஏ .சுப. மதிய ரசன் தலைமையிலும், பேரூர் கழக செயலாளர் பி.ஏ.நஜ்மூதீன் தலைமையி லும்,கிழக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர்வே. தமிழ்மாறன் தலைமையி லும் இளையான்குடி தெற்கு ஒன்றியத்தில் ஒன் றிய செயலாளர் ஆறு.செல் வராஜ் தலைமையிலும் இளையாங்குடி மேற்கு ஒன்றியத்தில் ஒன்றிய செய லாளர் கா. வெங்கட்ராமன் தலைமையிலும்,

காளையார் கோவிலில் கிழக்கு ஒன்றிய செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலை மையிலும், தெற்கு ஒன்றிய செயலாளர் யோக.கிருஷ் ணகுமார் தலைமையிலும் வடக்கு ஒன்றியத்தில் ஆர். எம் .கென்னடி தலைமையி லும் தேவகோட்டையில் தெற்கு ஒன்றிய செயலாளர் நாகனி ரவி தலைமையிலும் ,வடக்கு ஒன்றிய செயலா ளர் வே.பூபாலசிங்கம் தலை மையிலும், கண்ணங்குடி ஒன்றியத்தில் ஒன்றிய கழக செயலாளர் லெ.மு.ரவிச்சந் திரன் தலைமையிலும், சாக்கோட்டை கிழக்கு ஒன் றிய ம் புதுவயலில் செயலா ளர் சுப.சின்னத்துரை தலை மையிலும், மேற்குஒன்றி யத்தில் கே. எஸ் ஆனந்த் தலைமையிலும், கல்லல் கிழக்கு ஒன்றியத்தில் ஒன் றிய செயலாளர் நா. நெடுஞ் செழியன் தலைமையிலும் ,மேற்குஒன்றியத்தில் குன் னக்குடி சுப்பிரமணியன் தலைமையிலும்,

திருப்பத்தூரில் வடக்கு ஒன்றிய செயலாளர் விரா மதி மாணிக்கம் தலைமையி லும், தெற்கு ஒன்றிய செய லாளர் எஸ்.சண்முக வடி வேல் தலைமையிலும்,சிங் கம்புணரி தெற்கில் கே. பாலசுப்பிரமணியன் தலைமையிலும், வடக்கு ஒன்றியத்தில் பூமிநாதன் தலைமையிலும்,எஸ்.புதூர் பாரி வள்ளல் ஒன்றியத்தில் பி.செல்வராஜ் தலைமையி லும், சிவகங்கை தெற்கு ஒன்றிய த்தில் ஒன்றிய செய லாளர் எம்.ஜெயராமன் தலைமையிலும், வடக்கு ஒன்றியத்தில் ஒன்றிய செய லாளர் திருமலை முத்துராம லிங்கம் தலைமையிலும் மேற்கு ஒன்றியத்தில் பொறுப்பாளர் பெ.மந்தக் காளை தலைமையிலும் ஓர ணியில் தமிழ்நாடு பரப் புரை புதிய உறுப்பினர் சேர்த்தல் நிகழ்ச்சி நடை பெற்றது.

இதில் அந்தந்த ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் . சிங்கம்புணரியில் பேரூர் கழகச் செயலாளர் பி கதிர் வேல் தலைமையிலும், நெற் குப்பையில்பேரூர் கழகச் செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் கே. பி. எஸ். பழனியப்பன் தலைமையி லும், திருப்பத்தூரில் பேரூர் கழக செயலாளர் ஆர். கார்த்திகேயன் தலைமையி லும், கோட்டையூரில் ராசு தலைமையிலும், பள்ளத்தூ ரில் அசோக் தலைமையி லும், நாட்டரசன் கோட் டையில் ஜெயராமன் தலைமையிலும், திருப்பு வனத்தில் நாகூர் கனி தலை மையிலும் ஓரணியில் தமிழ் நாடு பரப்புரை கழக உறுப் பினர் சேர்த்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள் . மாவட்டம் முழுவதும் ஒன் றிய, பேரூர், நகர கழக செய லாளர்கள் ஓரணியில் தமிழ் நாடு கழக உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியில் வீடு வீடாக சென்று தீவிரமாக ஈடுபட்டு உள்ளார்கள்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி, அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், அகஸ்தீஸ்வரம் பேரூரில் உள்ள 248 வது பூத் பூஜைபுரைவிளையில் "ஓரணியில் தமிழ்நாடு" உறுப்பினர் சேர்க்கை முகாம் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் பா.பாபு தலைமையில் கழக கொடியினை ஏந்திய வண்ணம் ஒவ்வொரு இல்லத்திற்கும் நேரில் சென்று உறுப்பினர் சேர்க்கை மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக அரசின் நான்காண்டு சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துக் கூறி புதிய உறுப்பினர்கள் கழகத்தில் சேர்க்கப்பட்டனர். நிகழ்வில் பிரேம்ஆனந்த், தமிழ்மாறன், கணேசன், அருள் ஐயப்பன், முருகன், சுயம்புலிங்கம், தமிழன் ஜானி, தேவகி, சந்திரகலா உட்பட கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சிவகங்கை நகரில் 27வது வார்டில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை உறுப்பினர் சேர்க்கை யினை சிவகங்கை நகர் கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த் வீடுவீடாகச் சென்று துவக்கி வைத்தார். உடன் நகர் கழக நிர்வாகிகள் ஜெயகாந்தன், ராம்தாஸ் மற்றும் வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.